# The National Commission for Backward Classes Rules, 1994

# பின்தங்கிய வகுப்பினர்களுக்கான தேசிய குழு-விதிகள், 1994

**रजिस्ट्रेशन सं. डी. एल. - 33004/96**
**REGN. NO. D. L. - 33004/96**

भारत का राजपत्र
The Gazette of India

**असाधारण**
**EXTRAORDINARY**
**அசாதரணமான**
**भाग II - खण्ड 3 - उप-खण्ड (i)**
**PART II - Section 3 - Sub-section (i)**
**பகுதி II - பிரிவு 3 - துணைப்பிரிவு (i)**
**प्राधिकार से प्रकाशित**
**PUBLISHED BY AUTHORITY**
**அதிகார நிர்வாகத்தினரால் வெளியிடப்பட்டது**
**[सं 75] नई दिल्ली, मंगलवार, फरवरी 20, 1996/फाल्गुन 1, 1917**
**[No. 75] NEW DELHI, TUESDAY, FEBRUARY 20, 1996/PHALGUAN 1, 1917**
**[எண்.75] புது டெல்லி, செவ்வாய்கிழமை, பிப்ரவரி 20, 1996/பால்கோன் 1, 1917**

## MINISTRY OF WELFARE
## சமூகநல அமைச்சகம்

New Delhi, the 13th February, 1996

புது டெல்லி, 13 பிப்ரவரி, 1996

ஜி.எஸ்.ஆர் 100(ஈ).-பின்தங்கிய வகுப்பினர்கள் சட்டம், 1993 (1993ன் 27) க்கான தேசியக் குழுவின் பிரிவு 17 ன் துணைப்பிரிவு (2) (a) வை கொண்டு அதிகாரத்தை செயல்படுத்துவதில் பின்வரும் விதிகளை மத்திய அரசு கொண்டுவந்தது :-

1. தலைப்பு மற்றும் துவக்கம்:-

   1. இந்த விதிகள் பின் தங்கிய வகுப்பினர்களுக்கான தேசியக் குழுமம் ( சம்பளம், படிகள் மற்றும் தலைவர், உறுப்பினர்களின் பணி மற்றும் மற்ற நிபந்தனைகள்) விதிமுறைகள், 1996 என அழைக்கப்படும்.

2. அவர்களைப் பற்றிய தகவல் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட பிறகு அமலுக்கு வருவார்கள்.

2. விளக்கங்கள் : இந்த விதிகளின் பொருள் கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது.

(a) ”சட்டம்” என்பதன் அர்த்தம் பின்தங்கிய வகுப்பினர்களுக்கான தேசியக் குழுமம் சட்டம், 1993 (1993ன் 27) ;

(b) ”குழு” என்பதன் அர்த்தம் பின்தங்கிய வகுப்பினர்களுக்கான தேசியக் குழு

(c) ”தலைவர்” என்பதன் அர்த்தம் சட்டத்தின் பிரிவு 3 துணைப்பிரிவு(2) (a)-ன் கீழ் முன்மொழியப்பட்ட குழுவின் தலைவர்.

(d) ”உறுப்பினர்” எனபதன் அர்த்தம் குழுவின் ஒரு உறுப்பினர் மற்றும் தலைவர் உட்பட.

(e) இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகள் மற்றும் தொடர்கள் விளக்கமாக கூறப்படவில்லையானலும், சட்டத்தில் அவைகளுக்கு இடப்பட்டிருக்கும் அதே அர்த்தத்தைதான் அவைகள் கொண்டிருக்கின்றன.

3. சம்பளம் மற்றும் படிகள்.-(1) தலைவர், அவர் முன்பு வகித்த அரசு பணியைப் பொறுத்து ஒரு உச்சநீதி மன்றத்தின் அல்லது ஒரு உயர்நீதி மன்றத்தின் நீதிபதிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் இணையான சம்பளம் பெறுவதற்கு உரியவராக இருப்பார்.

(2) தலைவரைத் தவிர மற்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் இந்திய அரசாங்கத்தின் செயலாளருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் சம்பளத்தை பெறுவதற்கு உரியவர் ஆவார்கள்

4. தகுதி மற்றும் நிலை.- தலைவர், முன்பு வகித்த அரசுப்பணியைப் பொறுத்து ஒரு உச்சநீதி மன்றம் அல்லது ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியின் பணிநிலையை கொண்டிருப்பார். மற்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் ஒரு இந்திய அரசாங்கத்தின் செயலாளர் பணிநிலையை கொண்டிருப்பார்கள்.

5. உயர்மதிப்பு படி.- ஒரு உயர்நீதி மன்றத்தின் அமர்வு நீதிபதிக்கு அவ்வப்போது கிடைக்கக்கூடிய உயர்மதிப்பு படிக்கு இணையானதை தலைவர் பெறுவதற்கு உரியவர் ஆவார்.

6. உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டவர் பணியிலிருந்து ஓய்வு பெறுதல்.— மத்திய அல்லது ஒரு மாநில அரசின் பணியில் இருக்கும் உறுப்பினர்கள் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டால், அவரது பணியிலிருந்து எப்பொழுது ஓய்வு பெறுவாரோ அதே தேதியில் குழுவிலிருந்தும் ஓய்வு பெறுவார்.

7. விடுப்பு.- தலைவர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினரும் பின்வருமாறு விடுப்புக்கு உரியவர் ஆவார்கள்:-

a. மத்திய பொதுப் பணித்துறை சேவைகள் (விடுப்பு) விதிகள், 1972 படி அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டபடி உள்ள சம்பளத்துடன் கூடிய விடுப்பு, பாதி சம்பளத்துடன் கூடிய விடுப்பு

d. மத்திய பொதுப் பணித்துறை சேவைகள் (விடுப்பு) விதிகள், 1972-ன் கீழ் அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டபடி தற்காலிக அரசுப் பணியாளர்களுக்கு அனுமதித்திருக்கும்படி அசாதாரண விடுப்பு அனுமதிக்கப்படும்.

8. ஓய்வூதியம்.-(1) தலைவர் அல்லது ஒரு உறுப்பினர், மத்திய அல்லது மாநில அரசின் பணியில் உள்ளவாறு, நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு முன்பு அல்லது முதிர்ந்த வயதை அவர் அடையும் வரை, இதில் எது முற்படுகிறதோ, அவர் வகிக்கும் பணியின் விதிமுறைகளின் படி அவருடைய ஓய்வூதியம் மற்றும் மற்ற ஓய்வு பயன்கள் அவர் தலைவராக அல்லது உறுப்பினராக நியமனம் ஆன தேதியிலிருந்து பெறுவதற்கு உரியவர் ஆவார். மேலும் மற்ற ஓய்வு பயன்கள் சமமாக இருக்கும் பொழுது ஓய்வூதியத்தில் ஏதாவது பகுதி சேர்க்கப்பட்டிருப்பின் அவை உள்பட மொத்த ஓய்வூதியத்திற்கு சமமான தொகையளவு அவர் தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ இருக்கும் அவருடைய சம்பளம் குறைக்கப்படும் மற்றும் ஓய்வூதியத்தையும் மற்ற ஓய்வு பயன்களையும் தனித்தனியாக அவர் பெறுவதற்கு உரியவர் ஆவார்.

(2) மத்திய அல்லது மாநில அரசுகளில் நியமனம் செய்து பணிபுரிவதைப் போல, தலைவர் அல்லது ஒரு உறுப்பினர், துனண விதி(1)-ல் கூறப்பட்டிருக்கும் தெரிவை செயல்படுத்தப்படாமல் இருப்பின், இதற்கு முன் நியமனம் செய்யப்பட்டு அவர் முன்பு சார்ந்திருக்கும் பணிக்குண்டான விதிகளின்படி அவர் வகிக்கும் தலைவர் அல்லது உறுப்பினர் பணிக்கான ஓய்வூதியம் மற்றும் ஓய்வு பயன்கள் இப்பொழுதும் பொருந்தும்.

(3) ஒரு தலைவர் அல்லது ஒரு உறுப்பினராக நீடிக்கும் முன் மத்தியரசு அல்லது மாநில அரசின் பணிகளில் பணிபுரிந்திருப்பின்,

தலைவர் அல்லது உறுப்பினருக்கு ஓய்வூதியம் அளிக்கப்படமாட்டாது.

9. வருங்கால வைப்பு நிதி.- தலைவர் அல்லது ஒரு உறுப்பினர் குழுவிற்கு அவர் நியமனமானது முதல் அவர் மத்திய அல்லது மாநில அரசின் பணியில் முன்பு பணிபுரிந்தவராக இருந்தால் வருங்கால பொது வைப்பு நிதி அல்லது சமபங்கு வைப்புநிதியின் பயன்களை பெற்றிருப்பின், விதிமுறைகள் படி அவர் ஓய்வு பெறும் வரை தொடர்ந்து அதே வைப்பு கணக்கைத் தொடரலாம். சமபங்கு வைப்புநிதியாக இருப்பின், நியமனத்திற்கு முன்பு வகித்த பணியில் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில், தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ குழுவிற்கு நியமனமான தேதியிலிருந்து கணக்கைக்கொண்டு தொழிலாளருடைய சமபங்கு வைப்புநிதியில் குழுவினால் செலுத்தப்படும்.

விளக்கம்:- இந்த விதிமுறைகளின் கீழ் உறுப்பினர் ஒருவர் தன்னுடைய தெரிவை செயல்படுத்தும்பொழுது மத்தியரசிற்கு எழுத்து மூலமாக அவருடைய தெரிவை அவர் நியமனமான ஆறு மாதங்களுக்குள் தெரிவிக்கவேண்டும் மற்றும் அவ்வாறு செயல்படுத்தும் தெரிவே இறுதியானது.

(2) ஒரு தலைவர் அல்லது உறுப்பினர் உறுப்பினராக அவர் நியமனம் ஆகும் நேரத்தில், -

i. மாநில அல்லது மத்திய அரசு பணியில் பணிபுரிந்தவராகவும் மற்றும் நியமனத்திற்கு முன்பு அவர் சார்ந்திருக்கும் பணிக்குப் பொருந்தும் விதிமுறைகளின் கீழ் அவர் ஓய்வூதியம் மற்றும் மற்ற ஓய்வுக்காலப் பயன்களை தெரிவு செய்திருக்கவேண்டும்; அல்லது

ii. மத்திய அல்லது மாநில அரசின் உள்துறையால் அல்லது மற்ற நிர்வாகத்தினரால் முழுவதுமாக அல்லது பாதிக் கட்டுப்பாட்டின் கீழ் பணியிலிருந்து ஓய்வு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

iii. சமபங்கு வைப்புநிதியின் பயன்கள் கிடைப்பதற்கு உரியவராக ஒருவர் மத்திய அல்லது மாநில அரசின் அல்லது உள்ளாட்சி அல்லது மற்ற வேறு ஏதாவது நிர்வாகத்தினரின் முழுமையாக அல்லது அரசின் ஒரளவு கட்டுப்பாட்டிற்குள் உள்ளவற்றில் பணிபுரிபவராக இருக்கக்கூடாது மற்றும் இதற்காக

அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டவாறு இருக்கும் சமபங்கு வைப்புநிதி (இந்தியா) விதிகள், 1962-ன் படி நிர்வகிக்கப்படும்.

10. எஞ்சிய முற்காப்பு.-(1) பின்வரும் விதிகளில் தலைவருக்கான பணியின் நிபந்தனைகள் வெளிப்படையாக அளிக்கப்படமாட்டாது :-

a. உச்சநீதி மன்றத்தின் அல்லது ஒரு உயர்நீதி மன்றத்தின் அமர்வு நீதிபதி தலைவராக இருக்கும் பட்சத்தில், ஒரு உச்சநீதி மன்றத்தின் அல்லது ஒரு உயர்நீதி மன்றத்தின் அமர்வு நீதிபதிக்கு அனுமதிக்கப்பட்டதையே அளிக்கப்படும்; மற்றும்
b. உச்சநீதி மன்றத்தின் அல்லது ஒரு உயர்நீதி மன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தலைவராக நியமனமாகும் பட்சத்தில் அவ்வப்போது விசாரணை குழு|கமிட்டிக்கு அவர்கள் நியமனம் ஆகும் பொழுது அரசின் சம்பள நிர்ணயம் மற்றும் மற்ற நிபந்தனைகள் எதுவாக இருக்கிறதோ அதுவே அளிக்கப்படும்.

(2) இந்த விதிகளில் உறுப்பினர்களின் பணிக்கான நிபந்தனைகள் வெளிப்படையாக அளிக்கவில்லை, அவ்வப்போது இந்திய அரசாங்கத்தின் செயலாளருக்கு எவையெல்லாம் பொருந்துகிறதோ அவைகள் உறுப்பினருக்கும் பொருந்தும்

[எண். 12011|62|93-பீசிசி]

டாக்டர் எம்.எஸ். அஹ்மத், இணைசெயலாளர்

மேலாளர், இந்திய அரசு பிரஸ், ரிங் ரோடு, மாயாபுரி, புது டெல்லி-110064 அவர்களால் அச்சடிக்கப்பட்டு மற்றும் வெளியீட்டு கட்டுப்பாட்டாளர், டெல்லி-110054,1996 ஆம் ஆண்டு வெளியிடப்படுகிறது.